பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
08 07 2025 6 45
செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரேசிலில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி அந்நாட்டின் அதிபர் திரு. திரு. Loiz Inacio Lula Da Silva உடன் இருதரப்பு உறவுகள் குறித்து இன்று பேச்சுகள் நடத்த உள்ளார்.

2. இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்கள் காரணமாக உள்நாட்டு சந்தையில் வலுவான தேவை ஏற்பட்டுள்ளது என்று நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

3. சட்டம்-ஒழுங்கு முதல் சாமானிய மக்களுக்கான சமூகநீதி வரை அனைத்தும் திமுக ஆட்சியில் மக்களுக்கு எட்டாக் கனியாக உள்ளது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

4. தமிழகத்தில் மக்கள் நல்வாழ்வுத்துறையில் கடந்த 4 ஆண்டுகளில் 17 ஆயிரம் புதிய பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

5. விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Krishi Tyagi தென்கொரியாவின் Connor Doig இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

பிரேசிலில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி அந்நாட்டில் தனது பயணத்தின் இரண்டாவது கட்டாமக பிரேசிலியா சென்றடைந்துள்ளார்.

விமான நிலையத்தில் பிரதமரை அந்நாட்டின் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. Jose Mucio Monteiro அன்புடன் வரவேற்றார்.

பிரேசில் நாட்டின் பாரம்பரிய சம்பா நடன நிகழ்ச்சியுடன் பிரதமருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இன்று பிரரேசில் அதிபர் திரு. Loiz Inacio Lula Da Silva உடன் இருதரப்பு உறவுகள் குறித்தும், உத்திசார் ஒத்துழைப்பு குறித்தும் பிரதமர் திரு. நரேந்திர மோடி விரிவான பேச்சுகள் நடத்த உள்ளதாக வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் கூறியுள்ளார்.

வர்த்தகம், பாதுகாப்பு, எரிசக்தி, விண்வெளி, தொழில்நுட்பம், வேளாண்மை, சுகாதாரம் உள்ளிட்ட துறைகளை சார்ந்ததாக இந்தப் பேச்சுகள் அமைந்திருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

பின்னர் இரு தலைவர்களும் பிரதிநிதிகள் மட்டத்திலான பேச்சுகளில் கலந்துகொள்கிறார்.

இந்தப் பேச்சுவார்த்தையின் முடிவில் பரஸ்பரம் நலன் பயக்கும் 4 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாக உள்ளதாக பிரேசில் நாட்டுக்கான இந்திய தூதர் திரு. தினேஷ் பாட்டியா தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத எதிர்ப்பு, பரஸ்பரம் ரகசிய தகவல்களை பரிமாறிக்கொள்ளுதல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் ஒத்துழைப்பு, வேளாண் ஆராய்ச்சி ஆகியவற்றை உள்ளடக்கியதாக இந்த ஒப்பந்தங்கள் அமைந்திருக்கும் என்று அவர் கூறினார்.

இந்நிலையில் தமது ரியோடி ஜெனிரோ பயணம் ஆக்கப்பூர்வமாக அமைந்திருந்தது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

பிரிக்ஸ் உச்சி மாநாட்டின்போது பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் விரிவான பேச்சுகள் நடத்தியதாகவும், அந்தப் பேச்சுகள் அந்த நாடுகளுடனான இந்தியாவின் நட்புறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் அமைந்திருந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்கள் காரணமாக உள்நாட்டு சந்தையில் வலுவான தேவை ஏற்பட்டுள்ளது என்று நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

ரியயோடி ஜெனிரோவில் நேற்று நடைபெற்ற பிரிக்ஸ் நாடுகளின் நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கிகளின் ஆளுநர்கள் கூட்டத்தில் பேசிய அவர், வலுவான நிதித்துறைக்கு இலக்குகள் நிர்ணயித்து இந்தியா செயல்பட்டு வருவதாகக் கூறினார்.

நாட்டில் கட்டமைப்புத் துறையில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும், உற்பத்தியையும், போட்டித் தன்மையையும் வலுப்படுத்துவதை இலக்காகக் கொண்டு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாவும் அவர் கூறினார்.

உலகில் வளர்ந்து வரும் நாடுகளின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

அனைவரையும் உள்ளடக்கிய பன்முகத்தன்மையை முன்னெடுத்துச் செல்வதற்கான ஒரு முக்கியமான சர்வதேச அமைப்பாக பிரிக்ஸ் திகழ்வதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<>>>>

சட்டம்-ஒழுங்கு முதல் சாமானிய மக்களுக்கான சமூகநீதி வரை அனைத்தும் திமுக ஆட்சியில் மக்களுக்கு எட்டாக் கனியாக உள்ளது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் இருந்து தொடங்கியுள்ள யாத்திரையை நேற்று வாழ்த்திப் பேசிய அவர், விடியல் தருவதாக ஆசை வார்த்தைகளையும், சாத்தியமற்ற வாக்குறுதிகளையும் தெரிவித்து ஆட்சிக்கு வந்த திமுக, மக்களுக்கு எந்தவொரு நன்மையையும் செய்யவில்லை என்று தெரிவித்தார்.

போலியான வாக்குறுதிகளை அளித்த திமுக ஆட்சிக்கு முடிவுரை எழுத தமிழக மக்கள் தயாராகிவிட்டதாகவும் டாக்டர் எல். முருகன் மேலும் கூறினார்.

<<<<>>>>

இந்துசமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள கல்லூரிகளை நாள்தோறும் தூய்மையாக பராமரிக்க வேண்டும் என்று அத்துறைக்கான அமைச்சர் திரு. சேகர்பாபு கேட்டுக்கொண்டுள்ளார்.

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் அமைந்துள்ள ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரியில் நேற்று ஆய்வு நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கல்லூரி வளாகங்களை தூய்மையாக வைத்திருந்தால்தான் கல்வியின் மீது மாணவர்களுக்கு ஆர்வம் ஏற்படும் என்று கூறினார்.

இந்த கல்லூரிக்கு தேவையான ஆசிரியர்கள் விரைவில் நியமிக்கப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

பக்தர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப குற்றாலநாதர் ஆலயத்தில் குடமுழுக்கு விழா நடத்த ஏற்பாடு செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

<<<<>>>>

அரசுக் கல்லூரிகளில் காலியாக உள்ள 4 ஆயிரம் ஆசிரியர் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

மாநிலம் முழுவதும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 4 ஆயிரத்து 711 பேராசிரியர்கள் நிரந்தமாக பணியாற்றி வருவதாக ஒரு அறிக்கையில் அவர் கூறியுள்ளார்.

நிரந்தரப் பணியிடங்கள் நிரப்பப்படும் வரை காலிப் பணியிடங்களில் கௌரவ விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப்பட்டு மாணவர்களின் கல்வி பாதிக்கப்படாமல் இருக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 4 ஆண்டுகளில் 4 ஆயிரம் ஆசிரியர் பணியிடங்கள், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும், வழக்குகள் காரணமாக அந்த நடவடிக்கை தடைபட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் மக்கள் நல்வாழ்வுத்துறையில் கடந்த 4 ஆண்டுகளில் 17 ஆயிரம் புதிய பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 12 கோடியே 63 லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 11 புதிய கட்டிடங்களை திறந்து வைத்தும், புதிய மருத்துவ சாதனங்களை தொடங்கி வைத்தும் அவர் பேசினார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

தென்கொரியா மற்றும் ஜப்பானில் இருந்து அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீது அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் 25 சதவீத வரி விதித்து உத்தரவிட்டுள்ளார்.

--------------

ஈரானுக்காக இஸ்ரேல் ராணுவ தளங்களை உளவு பார்த்து புகைப்படம் எடுத்ததாக டெல்அவி-வைச் சேர்ந்த ஒருவரை இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

--------------

வடகிழக்கு மாநிலங்களில் நீர்வழிப் போக்குவரத்தை மேம்படுத்த மத்திய அரசு 5 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்ய உள்ளதாக மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

--------------

ஹிமாச்சலப்பிரதேசத்தில் கடந்த 6 நாட்களாக பெய்து வரும் கனமழைக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 14ஆக அதிகரித்துள்ளது. 28 பேரைக் காணவில்லை.

--------------

மதுரை மாநகராட்சியில் அனைத்து மண்டல தலைவர்களும் உடனடியாக பதவி விலக வேண்டும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

--------------

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர் கூட்டம் ஆட்சியர் திருமதி அழகுமீனா தலைமையில் நடைபெற்றது.

--------------

திருநெல்வேலி நகரில் உள்ள நெல்லையப்பர் காந்திமதி அம்மாள் கோவில் ஆணிப்பெருந் திருவிழாவின் தேரோட்டம் இன்று காலை நடைபெற உள்ளதை முன்னிட்டு நகரில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

--------------

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் குறைதீர் கூட்டத்தில் நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி சிவசௌந்தவல்லி வழங்கினார்.

--------------

திருவள்ளூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடம் இருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது சம்பந்தப்பட்ட துறை அலுவலகர்கள் உரிய நேரத்தில் தீர்வு காண வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் திரு. பிரதாப் அறிவுறுத்தியுள்ளார்.

--------------

கோவை – தன்பாத் வாராந்திர சிறப்பு ரயில் கோவையில் இருந்து இன்று காலை மணி 7.50க்கு புறப்படுவதற்கு பதிலாக மாலை 7 மணிக்கு புறப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

--------------

பராமரிப்பு பணி காரணமாக சென்னை சென்ட்ரல் - கூடூர் வழித்தடத்தில் இன்று காலை மணி 9.15 முதல் மாலை மணி 3.15 வரை இரு மார்கத்திலும் 11 ரயில்களின் சேவை ரத்து செய்யப்பட்டுள்ளது.

--------------

சென்னை கோடம்பாக்கம் மண்டலத்திற்கு உட்பட்ட சி.ஐ.டி. நகரில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் அளிக்கப்படும் சிகிச்சைகள், மருந்துகளின் இருப்பு ஆகியவை குறித்து மேயர் திருமதி பிரியா நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

--------------

*விளையாட்டுச் செய்திகள்*

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Kriish Tyagi தென்கொரியாவின் Connor Doig இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 3-6, 6-4, 10-6 என்ற செட் கணக்கில் இங்கிலாந்தின் Dylan Devis – Rhys Lawlor இணையை வென்றது.

--------------

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரார்த்தனா தோம்ரே, நெதர்லாந்தின் Arianne Hartono இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--------------

உலகக் கோப்பை வில்வித்தைப் போட்டி ஸ்பெயின் தலைநகர் மேட்ரிட் நகரில் இன்று தொடங்குகிறது.

------------

இலங்கையில் நடைபெற்ற தெற்காசிய காராத்தே சாம்பியன் போட்டியில் இந்தியா 23 தங்கம், 24 வெள்ளி, 12 வெண்கலப் பதக்கங்களை வென்று ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

<<<<>>>>